**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**G.O.P.No.53/2022**

**சாட்சியின் சான்றுரை RW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | பத்மபிரியா | வட்டம் | - | |
| க/பெ | - | மண்ணாங்கட்டி | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

12.06.2026 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.தீ.சுகந்தமாலா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் சாட்சி 1 பத்மபிரியா முதல் விசாரணை:

நான் வழக்கில் எதிர்மனுதாரர். பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதனை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

1. 07.06.2013 - என் மகன் ராமநாராயணன் பிறப்பு சான்றிதழ் எ.ம.சாஆ.1

2. 14.09.2012 - நான் வளவனுார் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் புகைப்பட நகல் எமசாஆ.2

3. 14.09.2012 - வளவனுார் காவல் நிலையத்தில் எனக்கு வழங்கிய புகார் மனு ஏற்பு சான்றிதழ் எ.ம.சாஆ.3

4. 27.09.2015 - ஆச்சாரியா சிக்ஷா மந்திர் சி.பி.எஸ்.சி பள்ளி வழங்கிய Free Education Scheme Certificate 2015-16 எமசாஆ.4

5. 15.08.2015 - ஆச்சாரியா சிக்ஷா மந்திர் சி.பி.எஸ்.சி பள்ளி வழங்கிய Fee Receipt எமசாஆ.5

6. 28.05.2018 - ஆச்சாரியா சிக்ஷா மந்திர் சி.பி.எஸ்.சி பள்ளி வழங்கிய Bus Fees Receipt எமசாஆ.6

(மனுதாரர் தரப்பில் 14.09.2012 தேதியிட்ட புகார் பற்றி மனுதாரருக்கு தெரியாது என்று தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையின் பேரில் எ.ம.சாஆ.2 மற்றும் எ.ம.சாஆ.3 ஆவணங்கள் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை:

மனுதாரர் ராணி என் முதல் கணவர் லெனின் சௌரிராஜா என்பவரின் தாயார் என்றால் சரிதான். லெனின் சௌரிராஜாவிற்கும் எனக்கும் இடையில் 29.01.2010 தேதியில் திருமணம் நடந்தது என்றால் ஆமாம். 29.10.2010 தேதியில் எங்களுக்கு ராமநாராயணன் என்ற குழந்தை பிறந்தது என்றால் சரிதான். லெனின் சௌரிராஜா 28.05.2012 தேதியில் சாலை விபத்தில் காலமானார் என்றால் சரிதான். என் கணவரின் ஊரும் என் தாயாரின் ஊரும் வளவனூர் என்றால் சரிதான். 2012ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலேயே நான் என் தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அதன்பின்பு என்னுடைய கணவரின் வீட்டிற்கு திரும்பி வரவில்லை என்றால் சரிதான்.

எனக்கு 2வது திருமணம் எப்போது நடந்தது என்றால் 24.04.2018 அன்று மண்ணாங்கட்டி என்பவருடன் திருமணம் நடந்தது. எங்கள் திருமணம் எங்கு நடந்தது என்றால் மைலம் ஊரில் நடந்தது, நாங்கள் புதுவை காலாப்பட்டில் குடும்பம் நடத்தினோம். எனக்கு 2வது திருமணத்தின் மூலம் மோஹிதா என்ற பெண்குழந்தை பிறந்தது என்றால் ஆமாம். அந்த குழந்தைக்கு எத்தனை வயது என்றால் தற்போது 7 வயது.

என் முதல் கணவர் லெனின் சௌரிராஜாவின் தந்தை தேவநாதன் 2017ம் ஆண்டு காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மைனர் ராமநாராயணனை பள்ளியில் சேர்த்தது தேவநாதன் என்றால் ஆமாம். நான் குறிப்பிட்டுள்ள ரூ.3 லட்சம் கட்டணம் செலுத்தி பள்ளியில் ராமநாராயணனை சேர்த்தது என் மாமனார் தேவநாதன் என்றால் சரிதான். பஸ் கட்டணம் செலுத்தியதும் தேவநாதன் என்றால் சரிதான். அந்த பள்ளி வில்லியனூரில் உள்ளது என்றும் வளவனூரில் உள்ள மனுதாரரின் வீட்டிலிருந்து தான் ராமநாராயணன் பள்ளிக்கு சென்று படித்து வருகிறார் என்றால் ஆமாம். தற்போது ராமநாராயணன் எந்த வகுப்பில் படிக்கிறார் என்றால் 11ம் வகுப்பு படிக்கிறார். மனுதாரர் தான் மைனர் குழந்தை

ராமநாராயணனை கவனித்துக்கொண்டு அவரை பராமரித்து உணவு, உடை, இருப்பிடம் கொடுத்து பள்ளிக்கு அனுப்பிவருகிறார் என்றால் சரிதான். நானும் என் கணவர் மண்ணாங்கட்டியும் வளவனூர் சென்று மனுதாரரிடம் ராமநாராயணனை எங்கள் பாதுகாப்பில் வளர்க்க கொடுக்கவேண்டும் என்று கேட்டோமா என்றால் 2 ஆண்டுகளுக்கு முன்பு நான் மட்டும் சென்று கேட்டேன், ஆனால் மனுதாரர் அதற்கு மறுத்துவிட்டார். மேற்படி குழந்தையை என் பாதுகாப்பில் கொடுக்கவேண்டும் என்று இதுவரை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மைனர் ராமநாராயணனும் மனுதாரரும் மட்டும் தான் வளவனூாரில் உள்ள வீட்டில் வசிக்கிறார்கள் என்றால் ஆமாம். என் கணவர் லெனின் சௌரிராஜா சாலை விபத்தில் காலமானதற்கு கிடைத்த மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தொகையினை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் என் பங்கிற்கு ஒதுக்கப்பட்ட தொகையை மட்டும் நான் பெற்றுக்கொண்டேன். மனுதாரர் இதுவரை மைனர் குழந்தையை நல்லமுறையில் பராமரித்து வருகிறார் என்றால் ஆமாம். மைனர் குழந்தை இதுவரை என்னுடன் வந்து 6மாதம் அல்லது ஒரு வருடம் நிரந்தரமாக எப்போதும் தங்கி இருந்ததில்லை என்றால் மனுதாரர் குழந்தையை என்னுடன் தங்குவதற்கு அனுமதிக்கவில்லை. காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தபோது விசாரணையில் போலிசார் மைனர் குழந்தை 5 நாட்கள் என்னுடன் இருக்கவேண்டும் என்றும் 2 நாட்கள் மனுதாரருடன் இருக்கவேண்டும் என்று கூறியதாக சொல்லியுள்ளதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு போலிசார் எப்போது சொன்னார்கள் என்றால் 2012ம் ஆண்டில் கூறினார்கள். எனக்கு 2வது திருமணம் நடந்தபிறகு நான் மைனர் குழந்தையை என்னிடம் கொடுக்கவேண்டும் என்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல 2012ம் ஆண்டு காவல் நிலையத்தில் எந்த ஏற்பாடும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மைனர் குழந்தை தவிற மனுதாரருக்கு

ஆதரவாக வேறு யாரும் இல்லை என்றும் அதனால் மனுதாரர் மேற்படி மைனரான ராமநாராயணன் அவருடைய பாதுகாப்பிலேயே வளரவேண்டும் என்று இந்த மனுவில் கோரியுள்ளது சரி என்றும் சொன்னால் சரியல்ல. மைனர் ராமநாராயணனுக்கு மோட்டார் வாகன விபத்து வழக்கில் வழங்கப்பட்டு வங்கியில் வைப்பீட்டில் உள்ள ரூ.11 லட்சம் இழப்பீடு தொகையினை மனுதாரர் பெற்றுவிடக்கூடாது என்ற எண்ணத்தில் நான் மைனர் ராமநாராயணனை மனுதாரருடன் இருக்க அனுமதிக்க கூடாது என்று ஆட்சேபனை செய்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் எந்த காலத்திலும் மேற்படி ரூ.11 லட்சம் இழப்பீடு தொகையினை உரிமை கோரமாட்டார் என்றும் அந்த தொகையை ராமநாராயணன் மேஜரான பிறகு அவரே பெற்றுக்கொள்ளலாம் என்றும் சொன்னால் அதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. குழந்தையை நான் வளர்க்க விரும்புவதாக சொல்வதில் உண்மை இல்லை என்றும் மைனர் ராமநாராயணன் என்னுடன் சேர்ந்து இருப்பதற்கு விரும்பவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மைனர் ராமநாராயணன் என்னுடன் சேர்ந்து இருந்தால் அவருடைய உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று மனுதாரரும் மைனர் குழந்தையும் அச்சப்படுகிறார்கள் என்றால் சரியல்ல. எனவே மனுதாரரின் மனுவை அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

ARUMUGAM MANIMOZHI
Digitally signed by ARUMUGAM MANIMOZHI
Date: 2026.06.12 18:15:55 +0530

Principal District Judge,

Villupuram.